Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC.908/2025

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.கண்ணன் | Occupation | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Father’s name | காளியப்பன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of March 2026.

13.03.2026

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை

நான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 15.03.2025ம் தேதி காலை 08.00 மதுவிலக்கு அமலாக்க பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது தலைமை காவலர் 1034 ரமேஷ், தலைமைகாலர் 1659 பாலமுருகன் அவர்களுடன் மதுவிலக்கு குற்றங்கள் சம்பந்தமாக திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பிள்ளையார் நத்தம் ஏரியாவில் ரோந்து சென்ற போது திருவில்லிபுத்தூர் மங்காபுரம் செல்வராஜ் மகன் ராமர் அவயது 43 என்பவர் 5 லிட்டர் பிளாஸ்டிக் குடத்தில் 2 லிட்டர் அளவுள்ள வெள்ளை நிற பானத்துடன் நின்று கொண்டிருந்தவர் போலீஸ் பார்ட்டிகளாகிய எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரிக்கையில் 2லிட்டர் பனங்கள் விற்பனைக்காக வைத்திருப்பதாக கூறினார். பின்னர்அவரை கைது செய்து காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின்படி பனங்கள்ளை கொட்டி அழித்தும் பிளாஸ்டிக் குடத்தை உடைக்கவும் செய்யப்பட்டது. பின்னர் அந்த இடத்தில் எதிரியை நிலையம் கொண்டு செல்ல தயாரிக்கலான அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் முன்வராததால் போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே கையொப்பம் இட்டோம். பின்னர்எதிரி மற்றும் அத்தாட்சியுடன் நிலையம் வந்து

திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு குற்ற எண்.21/2025 பிரிவு.4(1)(C) TNP Amendment Act ன் கீழ் எதிரி மீது வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையையும் அசல் அத்தாட்சியையும் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். மேல்விசாரணைக்காக வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அத்தாட்சி அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

இவ்வழக்கு சம்பந்தமாக ரோந்து பணிக்கு திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு காவல்நிலையத்திலிருந்து தான் நாங்கள் புறப்பட்டு சென்றோம் என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து மேற்படி பிள்ளையார்நத்தம் காவல் நிலையத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சுமார் 5 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். பிள்ளையார்நத்தம் உள்ள பகுதிகளில் 1000 த்திற்கும் மேற்பட்ட பனைமரங்கள் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரி குறிப்பாக எந்த மரத்திலிருந்து பனங்கள் இறக்கினார் என்பது குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவம் நடந்ததாக கூறப்படும் மரத்தினை குறிப்பிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து பனைமரம் ஏற பயன்படுத்தும் கருவிகளான அருவாள், கால்தலை, போன்ற உபகரணங்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். பனங்கள்ளை கண்டுபிடிப்பதற்காக சிறப்பு பயிற்சிகள் எதுவும் நான் படிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நாங்கள் கைப்பற்றியதாக கூறப்படும் குடத்தினை புகைப்படம் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் சொத்துக்களை அழிப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் காவல் ஆய்வாளர் சொன்னதன் பேரில் அழித்தோம். இவ்வழக்கின் அத்தாட்சி, முதல் தகவல் அறிக்கை மற்றும் எனது BNSS பிரிவு 180(3) வாக்குமூலத்திலும் காவல் ஆய்வாளர் சொன்னதன் பேரில் மேற்படி கைப்பற்றப்பட்ட பொருட்களை அழித்தாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் உத்தரவின்பேரில் அழித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கைப்பற்றப்பட்டதாக கூறப்படும்பொருட்களை

அழிப்பதற்கு முன் நீதிமன்றத்தில் அனுமதி எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். எதிரியை கைது செய்த போது பனங்கள் இறக்கியதாக அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் தனிநபரிடம் கையெழுத்து பெறாமல், போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே சாட்சிகளாக கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரிதான். தனிநபர் சாட்சிகள் யாரும் கையெழுத்து செய்ய முன்வராததால் நாங்களே கையெழுத்து செய்தோம். மேற்படி நாங்கள் அழைத்தபோது முன்வராத தனிநபர்களின் விவரங்கள் பற்றி ஆய்வாளர் என்னை விசாரித்தபோது நான் கூறவில்லை என்றால் சரிதான். எதிரியை சோதனை செய்வதற்கு முன் நீதிமன்றத்திலோ அல்லது எங்களது மேல் அதிகாரிகளிடமோ எந்தவித உத்தரவும் பெறப்படவில்லை என்றால் காவல் ஆய்வாளரிடம் உத்தரவு பெற்றோம். எதிரியிடம் இருந்து பனங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றி சம்பவயிடத்திலேயே அழித்துவிட்டோம். மேற்படி 2 லிட்டர் பனங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் காவல் ஆய்வாளரின் உத்தரவின்படி சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்துவிட்டோம். தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் படி மேற்படி பனங்களை அழிப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால், காவல் ஆய்வாளர் கூறியதன் பேரில் தான் அழித்தோம். காவல் ஆய்வாளரிடமிருந்து எழுத்து மூலமாக உத்தரவு எதுவும் நான் பெறவில்லை என்றால் சரிதான் வாய்மொழியாத்தான் உத்தரவு பெறப்பட்டது. உண்மையில் எதிரியிடமிருந்து பனங்கள்ளை கைப்பற்றியிருந்தால், அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றாலும், அவ்வாறு கைப்பற்றப்படாததால் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி மீது புள்ளி விபரத்திற்காக இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் அழித்தல் செய்யப்படவில்லை என்றால் அத்தாட்சியிலேயே கைப்பற்றப்பட்ட சொத்துக்களை அழித்தது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. சிறப்பு சார்பு ஆய்வாளரான எனக்கு மேற்படி பொருட்களை கைப்பற்றுவதற்கோ அழிப்பதற்கோ எந்தவித அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. எனது மேல் அதிகாரியான காவல் ஆய்வாளரின் உத்தரவின்பேரில் தான் அழித்தேன்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.